


காஞ்சிபுரம் வடக்கு, பம்மல் தெற்கு பகுதி தி.மு.கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் பம்மல் எல்.சி. திருமண மண்டபத்தில் பகுதி கழக செயலாளர், மண்டல குழுத் தலைவர் பம்மல் வே.கருணாநிதி ஏற்பாட்டில் ப.காளேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.வட்ட கழக செயலாளர் வி.எஸ். ஜெகநாதன் வரவேற்றார். உமாசங்கர், பன்னீர்செல்வம்,துரை இளங்கோவன்,பா.கவிதா,பா.டில்லி, பி.ஜே.வேந்தன்,இரா.கந்தவேலு, என். கே.ரவிச்சந்தின், சு.மனோகரன்,ஆர்.கோகுல் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர், அமைச்சர் தா.மோ. அன்பரசன், இ.கருணாநிதி எம். எல்.ஏ, எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ,தாம்பரம் மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், தொகுதி பொறுப்பாளர் ரபி அகமது ஆகியோர் 2026 தேர்தல் பணிகள் குறித்து ஆலோசனை வழங்கினர்.இதில் அனைத்து கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்



திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி தொகுதிக்கு உட்பட்ட பள்ளிப்பட்டு.ஆர்.கே. பேட்டை. ஆகிய ஒன்றியங்கள் உள்ள ஊராட்சியில் கிராமங்களில் திருவள்ளூர் மேற்கு மாவட்ட செயலாளர் திருத்தணி சட்டமன்ற உறுப்பினர் திருத்தணி எஸ்.சந்திரன், பொதுமக்களிடம் உள்ள பல்வேறு கோரிக்கைகளை கேட்டு அறிந்து சம்பந்தப்பட்ட அதிகாரியிடம் தொடர்பு கொண்டு உடனடியாக அடிப்படை வசதி செய்து தரப்படும் என்று உறுதி அளித்தார் உடன் ஒன்றிய செயலாளர்கள் அரசு அதிகாரிகள் கழக நிர்வாகிகள் பொதுமக்கள்கள் பலர் உள்ளனர்.

### அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையேற்று சிறப்புரை!

# குன்றத்தூர் மத்திய ஒன்றிய தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம்!

## ஒன்றியப் பொறுப்பாளர் திருமுடிவாக்கம் இ.மணி வேண்டுகோள்!

காஞ்சிபுரம், ஜூன்.1

குன்றத்தூர் மத்திய ஒன்றிய தி.மு.க. பொறுப்பாளர் திருமுடிவாக்கம் இ. மணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், குன்றத்தூர் மத்திய ஒன்றிய தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம் நாளை (02.06.2025 - திங்கட்கிழமை) மாலை 4 மணி அளவில், மாங்காடு மெயின் ரோடு சிக்கராயபுரம் பகுதியில் அமைந்துள்ள திருமுருகா திருமண அரங்கத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் குறு சிறு நடுத்தர தொழில் நிறுவனங்களின் துறை அமைச்சர் தா. மோ.அன்பரசன் தலைமையேற்று சிறப்புரையாற்றுகிறார்.

இதில் குன்றத்தூர் தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர், காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் படப்பை ஆ. மனோகரன், திருபெரும்புதூர் தொகுதி தேர்தல் மேற்பார்வையாளர் மீஞ்சூர் கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், குன்றத்தூர் ஒன்றிய குழு தலைவர் திருமதி சரஸ்வதி மனோகரன், குன்றத்தூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் ஏ வந்தே மாதரம், குன்றத்தூர் ஒன்றிய குழு துணை தலைவர் உமா மகேஸ்வரி வந்தே மாதரம், ஒன்றிய கழக நிர்வாகிகள் மு.சுப்பிரமணி, வாசுகி, மகேஷ், வி.ஹரி, மா.பதிமேல்அழகன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் மாவட்ட, ஒன்றிய அணிகளின் நிர்வாகிகள், கிளைக் கழக செயலாளர், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், சியறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் ஜூன் 3 முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழா, 2026 சட்டமன்றத் தேர்தல் பணி, கழக வளர்ச்சிப் பணிகள்.

இவ்வாறு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் திருமுடிவாக்கம் இ. மணி கேட்டுக் கொண்டுள்ளார்.

### சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதி

# கோவிலம்பாக்கத்தில் புதிய மின்மாற்றிகள்!

## ச.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

சென்னை, ஜூன் 1 -

சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட புனித தோமையார் மலை ஒன்றியம் கோவிலம்பாக்கம் ஊராட்சி ராஜேஸ்வரி நகர் அண்ணா நகர், மற்றும் நன்மங்கலம் ஊராட்சி அருள்முருகன் நந்தவன நகர் மற்றும் செல்வராஜ் நகர் ஆகிய பகுதிகளில் மின்னழுத்த குறைபாடுகள் ஏற்படுகின்றன என்று பொதுமக்களின் கோரிக்கை வைத்தனர். அதன் அடிப்படையில் 30-05-2025 அன்று 100 KAV திறன் கொண்ட இரண்டு புதிய மின்மாற்றிகளை சோழிங்கநல்லூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எஸ். அரவிந்த் ரமேஷ் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில், புனித தோமையார் மலை தெற்கு ஒன்றிய கழக செயலாளர் கோவிலம்பாக்கம் ஜி.வெங்கடேசன், ஒன்றியப் பெருந்தலைவர் சங்கீதா பாரதிராஜன், மாவட்ட குழு உறுப்பினர் என்.வேதகிரி, மின்சார வாரிய சோழிங்கநல்லூர் கோட்ட செயற்பொறியாளர் பாலசுப்பிரமணியன், உதவி செயற்பொறியாளர் உதவி பொறியாளர், ஊராட்சி மன்ற வார்டு உறுப்பினர்கள் கழக நிர்வாகிகள் அனைவரும் உடனிருந்தனர்.

### கலைஞர் நகர் தெற்குப் பகுதி

# 137 ஆ வட்ட கழக செயற்குழு கூட்டம்!

## வட்ட கழக செயலாளர் அ.கதிரேசன் அறிவிப்பு

சென்னை, ஜூன் 1 -

137 ஆ வட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம் இன்று நடைபெறுகிறது என வட்டடச் செயலாளர் அ.கதிரேன் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

தென் சென்னை தெற்கு மாவட்ட கழகச் செயலாளரும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சருமான மா. சுப்பிரமணியம் ஆலோசனைப்படி கலைஞர் நகர் தெற்கு பகுதி 137 ஆ வட்டக் கழக செயற்குழு கூட்டம் இன்று (1.06.2025 - ஞாயிறு) மாலை 6.30 மணி அளவில் கலைஞர் நகர் தெற்கு பகுதி கழக அலுவலகத்தில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு வட்ட அவைத் தலைவர் என். சக்கரவர்த்தி தலைமை தாங்குகிறார்.

இக்கூட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடுவதை குறித்து ஆலோசனை மற்றும் கழக ஆக்க பணிகள் குறித்து ஆலோசிக்கப்படுகிறது.

எனவே நமது 137 ஆ வட்ட கழகத்திற்கு உட்பட்ட மாவட்ட அமைப்பாளர்கள், மாவட்ட துணை அமைப்பாளர்கள், மாவட்டப் பிரதிநிதி, பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள், மற்றும் மகளிர் அணியினர், செயற்குழு உறுப்பினர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு வட்டக் கழகச் செயலாளர் அ.கதிரேசன் கேட்டுக் கொண்டுள்ளார்





சோழிங்கநல்லூர் தொகுதி கோவிலம்பாக்கம் ஊராட்சி ராஜேஸ்வரி நகர் அண்ணா நகர், மற்றும் நன்மங்கலம் ஊராட்சி அருள்முருகன் நந்தவன நகர் மற்றும் செல்வராஜ் நகர் ஆகிய பகுதிகளில் பொதுமக்களின் கோரிக்கையின்படி மின்னழுத்த குறைபாட்டை போக்க 100 KAV திறன் கொண்ட இரண்டு புதிய மின்மாற்றியை எஸ்.அரவிந்த்ரமேஷ் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். உடன் ஒன்றியச் செயலாளர் கோவிலம்பாக்கம் ஜி.வெங்கடேசன், ஒன்றிய பெருந்தலைவர் சங்கீதா பாரதிராஜன், என்.வேதகிரி, செயற்பொறியாளர்கள், ஊராட்சி மன்ற வார்டு உறுப்பினர்கள் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### இந்திய ரிசர்வ் வங்கி அறிவித்துள்ள –

# நகைக்கடன் நிபந்தனைகளை கைவிட வலியுறுத்தி மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## தஞ்சையில் – ஏ.கே.எஸ்.விஜயன் தலைமையில் நடைபெற்றது!

தஞ்சாவூர், ஜூன். 1-

இந்திய ரிசர்வ் வங்கி உத்தரவிட்டுள்ள, நகைக்கடன் நிபந்தனைகளை உடன் கைவிட வலியுறுத்தி மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் தஞ்சை தலைமை தபால் நிலையம் எதிரில் ஆயிரக்கணக்கான விவசாயிகளை ஒருங்கிணைத்து நடத்தப்பட்டது.

விவசாயிகள், ஏழை மக்கள் நடுத்தர மக்கள் தங்களிடம் உள்ள நகைகளை கூட்டுறவு மற்றும் வங்கிகளில் அடமானம் வைத்து விவசாய, அவசரத் தேவைகளுக்கு பயன்படுத்தி வருகின்றனர். அடகு வைத்த நகையை திருப்ப முடியாத மக்கள் வட்டியை மட்டும் கட்டி மறு அடமானம் வைப்பது நடைமுறையில் உள்ளது. தற்போது இந்திய ரிசர்வ் வங்கி தங்க நகை கடன் பெறுவதற்கு புதிய நிபந்தனைகளை அறிவித்துள்ளது.

இந்த நிபந்தனைகள் விவசாயிகளையும், வியாபாரிகளையும், பொதுமக்களையும் பெரிதளவில் பாதிக்கும். இந்த மக்கள் விரோத போக்கை கண்டித்து, அனைத்து விவசாய சங்கங்களின் தலைவர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உள்ளாட்சி அமைப்புகளின், முன்னாள், இந்நாள் நிர்வாகிகள் ஒருங்கிணைத்து கார்ப்ரேட் கம்பெனிகளுக்கு ஆதரவாக விவசாயிகள் நடுத்தர, சாதாரண மக்கள் மற்றும் வியாபாரிகளுக்கு எதிராக ஒன்றிய அரசின் கைப்பாவையாக செயல்படும் இந்திய ரிசர்வ் வங்கி உத்தரவிட்டுள்ள நகைக்கடன் நிபந்தனைகளை உடன் கைவிட வலியுறுத்தி மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்.

தி.மு.க மாநில விவசாய அணிச் செயலாளரும், தமிழ்நாடு அரசின் புது டெல்லி சிறப்புப் பிரதிநிதியுமான ஏ.கே.எஸ்.விஜயன் தலைமையில் தஞ்சையில் நடைபெற்ற இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்டச் செயலாளர்கள் சு.கல்யாணசுந்தரம் எம்.பி, துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ, பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ, நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ, கே.கே.செல்லபாண்டியன். தி.பழநிவேல், கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம். ச.முரசொலி எம்.பி. வை.செல்வராஜ் எம்.பி, எம்.எல்.ஏக்கள் டி.கே.ஜி.நீலமேகம், என். அசோக்குமார், பன்னீர் செல்வம், மாரிமுத்து, முன்னாள் எம்.பி, செ.இராமலீங்கம் மாநகரச் செயலாளர்கள் சு.ப.தமிழழகன், சண்.இராமநாதன், விவசாய சங்க பிரதிநிதிகள் மற்றும் தோழமை கட்சியினர் டி.ஆர்.லோகநாதன். சாமி நடராஜன். பி.எஸ்.மாசிலாமணி, ஜெய்சங்கர், முன்னாள் எம்.எல்.ஏகள் எம். இராமசந்திரன், கே.டி. மகேஷ்கிருஷ்ணசாமி, எஸ்.கே.வேதரெத்தினம், வை.சிவபுண்ணியம், ஆடலரசன், பால அருட்செல்வன், விவசாய சங்க மாநில நிர்வாகிகள் என். கே. கே. பெரியசாமி, இரா. தமிழ் மணி, எஸ். அப்துல்காதர், கள்ளிபட்டி மணி, மா.முத்துராமலிங்கம், பா. செந்தமிழ்செல்வன், எல்.பி.தர்மலிங்கம், குறிஞ்சி என். சிவகுமார், முதுகுளத்தூர் கே.முருகவேல், ஆர். டி.ஏ. ஆதிசேஷன், ஆர்.கணேசன், கு.செல்லப்பா, டி.எம். அரியப்பன், டி. வெங்கடேசன், ஜித்து (எ) ராஜரத்தினம், வி.என்.மணி, என். நல்லசேதுபதி, கே.புருஷோத்தமன், த.சித்தார்த்தன், சுப்பிரமணியன் உள்ளிட்ட விவசாய அணி மாவட்ட நிர்வாகிகள், தோழமைக் கட்சி நிர்வாகிகள், விவசாய சங்கங்கள், விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி நிர்வாகிகள், நகர ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர் கழக செயலாளர்கள், கழக நிர்வாகிகள் ஆயிரக்கணக்கான விவசாயிகள் திரளாக கலந்து கொண்டனர்.

### தமிழினத் தலைவர் – முத்தமிழறிஞர் கலைஞரின் 102 வது பிறந்தநாளை

# கழக பொறியாளர் அணி சார்பில் “செம்மொழி நாளாக” சிறப்பாகக் கொண்டாடிடுவீர்!

## எஸ்.கே.பி.கருணா வேண்டுகோள்!

தி.மு.க. பொறியாளர் அணியின் மாநில நிர்வாகிகளின் காணொளி கூட்டம் 30-5-2025 அன்று மாநிலப் பொறியாளர் அணித் தலைவர் துரை கி.சரவணன் தலைமையில் நடைபெற்றது.

அதில் மாநிலத் துணைச் செயலாளர்கள் கு.சண்முகசுந்தரம், இரா.நரேந்திரன், வே.உமாகாந்த், சி.பிரதீப், இரா.ப.பரமேசுகுமார், ஆர்.வி.எல்.ரவிச்சந்திரன், கலை.கார்த்திகேயன், அம்பாள்.நந்தகுமார், வெற்றி.ஞானசேகரன், பி.அன்பழகன், எம்.பி.ராஜவர்மன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன.

1) அருகில் உள்ள அரசு பள்ளிகளுக்கு குடிநீர் வசதி செய்துதருதல் மற்றும் அங்கன்வாடிகளுக்கு தேவையான சமையல் பாத்திரங்கள் வழங்குதல்

2) ஆதரவற்ற முதியோர்களுக்கு உதவிகள் செய்தல்.

3) திருக்குறளுக்கு உரை எழுதிய கலைஞரின் திருக்குறள் உரை புத்தகத்தினை அருகில் இருக்கும் பள்ளிக்கூட நூலகங்களுக்கு வழங்குதல் மற்றும் ஏழை எளிய மக்களுக்கு பயன் உள்ள வகையில் செம்மொழிநாளாக தலைவரின் பிறந்தநாள் கொண்டாட்டங்களை பொறியாளர் அணியினர் நடத்திட வேண்டும்.

**எஸ்.கே.பி.கருணா**
மாநிலச் செயலாளர்
கழக பொறியாளர் அணி

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## மு. சண்முகம்
ஜூன் 1 (1987)



தந்தை பெரியாரின் நம்பிக்கைக்குரிய தொண்டராகப் பணியாற்றிக் கொண்டிருந்தபோது, பேரறிஞர் அண்ணாவின் கவனத்தைக் கவர்ந்து அவரது இதயத்திலும் தனக்கென ஒரு இடத்தை பிடித்துக் கொண்டவர்.

கழகம் துவங்கிய காலத்திலிருந்து தலைமைக் கழகத்தில் பொறுப்பாளராக பணியாற்றியவர்.

பேரறிஞர் அண்ணா – தலைவர் கலைஞர் ஆகியோரிடம் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர்.

‘நம்நாடு’ திங்கள் இதழாக வெளிவந்தபோதும், ‘கழகக் குரல்’ வார இதழிலும், ‘தோழன்’ என்ற புனைப்பெயரில் இவர் எழுதிய கட்டுரைகள் ஏராளம்.

1976ல் தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்ட பிறகு, மிசா காலத்தில் சோதனை ஏற்பட்டபோதுதான் ‘தோழன்’ என்ற பெயர் அவருக்கு எவ்வளவு பொருத்தம் என்பது புரிந்தது என தலைவர் கலைஞர் கூறியுள்ளார். மேலும், தனது இரங்கல் உரையில் “கழகத்தின் வரலாற்றுக் குறிப்புப் புத்தகம் – எழுதப்படாத புத்தகம் சண்முகம்” எனவும் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**